# வேத பாரதி செய்திகள்

Tamil Monthly
தமிழ் மாத இதழ்
VEDABHARATHI SEITHIGAL

| | | | | |
|---|---|---|---|---|
| மலர்:4 | இதழ்:12 | செப்டம்பர்:2020 | ரூ.10/- | வருட சந்தா:ரூ.100/- |
| Volume:4 | Issue:12 | September : 2020 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |








ஸ்ரீ அப்பய்ய தீட்சுஷிதர்
(1520 – 1593)

உ





# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை – 600 085. தொலைபேசி : 044 – 2447 4744

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகாநந்த ப்ர்ம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் அருளாணைப்படி

கடந்த 05.07.2020 முதல் 02.09.2020 வரை நடைபெற்று வரும் சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீட சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞையில் சாதுர்மாஸ்ய குரு ஸபர்யா நூலுடன் ஸ்தோத்திரங்களை ஸேவார்த்திகள் தினஸரி பாராயனத்தில் கலந்து கொண்டு ஸ்ரத்தையுடன் பாராயணம் செய்து ஆசார்யர்களின் பரிபூர்ண அனுக்ரஹம் பெற்றோம்.

மண்டலி உறுப்பினர்களும் குடும்பத்தினர்களும் குருஜியின் பரிபூர்ண ஆசியுடன் ஸகல ஸௌபாக்யமுடன் நோயற்ற வாழ்வும் குறையற்ற செல்வமும் பெற்று வாழ ப்ரார்த்திக்கிறோம்.

**ஸ்ரீ சுப்ரமண்யன்**
**செயலாளர்**

# வேதபாரதி
## செய்திகள்




**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 12

**ய உத[3]கா[3]ந்மஹறதோ[1]ர்ணவாத்[3]விப்[4]ராஜமாந: ஸரிரஸ்ய மத்[4]யாத்ஸமா வ்ருஷபோ[4] லோஹிதா[1]க்ஷ: ஸுர்யோ விபச்சின்மநஸா புநாது!**

**(தை[1]த்திரீய. ஆரண்யகம்)**

**பொருள் :** *எந்த ஸூர்ய தேவன் கிழக்குத் திசையிலிருக்கும் பெரிய ஸமுத்ரத்தில், ஜலத்தின் நடுவிலிருந்து விசேஷமாகப் ப்ரகாசித்து உதயமாகின்றானோ, விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்றானோ, உத்தமர்களில் உத்தமனாக இருக்கின்றானோ, சிவந்த நிறத்துடன் இருக்கின்றானோ, எல்லாவற்றையும் அறிந்தவனாகவும் இருக்கின்றானோ அவன் ஆதரவுடன் மனதால் என்னைப் புனிதமாக்கட்டும்.*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 4 இதழ்: 12

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள் **Vedabharathi** என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**


REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/19-20 /
Valid from 28.02.2019 to 31.12.2020


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு.. | 5 |
| புரட்டாசி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| உண்மையான பக்தி | 14 |
| மாலைமாற்று | 16 |
| சுபாஷிதம் | 19 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 20 |
| ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு | 21 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 27 |
| பாரத தேசப் புனித யாத்ரை | 30 |
| இந்தியப் பொருளாதார உயர்வு பெண்களின் கைகளில்தான் இருக்கிறது. | 33 |
| தர்மத்தின் குரல் | 36 |
| செல்வ செழிப்பும் இழப்பும் | 37 |
| புரோஹிதர் | 39 |
| வேதபாரதி - ஊரப்பாக்கம் கூடுவாஞ்சேரி பகுதி யஜுர் மற்றும் ரிக் வேத உபாகர்மா நிகழ்வு | 42 |



புத்தக வடிவமைப்பு :

**ரெம்ஸ் பிரிண்டஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# ஒரு நிமிடம் உங்களோடு.....

நம் எல்லோராலும் மனதில் எதையும் சிந்திக்காமல் இருக்க முடியாது. நாமே அப்படி இருக்க நினைத்தால் நம் மனதில் ஆயிரம் சிந்தனைகள் வந்துபோகும். நாம் மற்றவர்களிடம் பேசும்போது வெறும் தத்துவத்தை மாத்திரம் பேசக்கூடாது. எல்லாவற்றையும் கலந்து பேசவேண்டும். அப்போதுதான் நம்மீது அவருக்கு ஒரு அபிமானம் ஏற்படும்.

நாம் மற்றவர்களிடம் நம்முடைய சிநேகத்தை, நட்பை, அன்பை வெளிப்படுத்தினால் அவர்கள் அதை திருப்பி நம்மிடம் வெளிப்படுத்தமாட்டார்கள். அதனால் நாம் நான்கு விதமாக நம்முடைய சிநேகத்தை காட்டவேண்டும் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. (துருவன் கூறுவது)

நமக்கு சமமான மனதுடையவர்களிடம் நம் மனதில் உள்ளவற்றை பங்கு வைத்தால் அவரும் அதைப் புரிந்துக்கொண்டு நம்மிடம் அதை திரும்ப கூறி இருவரும் சகஜமாக பேசலாம். இதுதான் **“மைத்ரீபாவம்” “மித்ர பாவம்”**

வயதில் முதிர்ந்தவர்கள் நம்மிடம் சமமாக பேசமாட்டார்கள். அவர்கள் கூறுவதுதான் உயர்ந்தது என்ற எண்ணம் இருக்கும். அவர்களிடம் ஆதரவு காண்பித்து பேசி பழகவேண்டும். அவர்களிடம் வாதம் செய்யக்கூடாது, பிரகலாதன் தன் தந்தையிடம் ஆதரவுடன் பேசியதுபோல் நாம் பேசவேண்டும் பழகவேண்டும். அவர்களுடைய குற்றம் குறைகளைப் பெரிதுபடுத்தக்கூடாது.

மூன்றாவதாக நம்மைவிட சிறியவர்கள், குழந்தைகள் ஆகியோருடன் நாம் காருண்ய பாவத்துடன் பழகவேண்டும். இப்படி செய்வது கஷ்டம் என்று அவர்களிடம் கூறுவதற்கு பதில், இப்படி செய்தால் அதன் பலன் எப்படி இருக்கும் என்று அவர் மனதில் பதிந்துக்கொள்ளும்படி பேசவேண்டும். அதற்காக தத்துவங்கள் கலந்த சிறிய சிறிய கதைகளைக் கூறவேண்டும். அப்போது நம்மிடம் அவர்களுக்கு அன்பு ஏற்படும். இப்படி

செய்யாதே, அப்படி செய்யாதே என்று கூறக்கூடாது.

நான்காவதாக இருப்பவர்கள் நம்மை கோபப்பட வைப்பவர்கள். அவர்கள் நம் மனைவியாகவும் / கணவராகவும், சொந்தக்காரர்களாகவும் இருக்கலாம். மற்றவர்களின் குற்றம் குறைகளையே நம்மிடம் கூறுவார்கள். இப்படிப் பட்டவர்களிடமிருந்து நாம் சற்று விலகி இருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்கள் அவர்கள் நினைத்ததைச் செய்வார்கள். மற்றவர்கள் சொல்வதைக் கேட்கமாட்டார்கள்.

இதைத்தான் மஹாபெரியவாளும் "தெய்வத்தின் குரலில்" கூறுகிறார்.

அன்பை முக்கியமாக வைத்து அதில் நான்கு பிரிவுகளைச் சொல்கிறார். **மைத்ரீ, கருணா, முதிதா, உபேக்ஷ** என்கிற நான்கு. ஸந்தோஷமாக இருந்து கொண்டிருப்பவர்களிடம் காட்டும் ஸ்நேஹித பாவம் **"மைத்ரீ"**, துன்பப்படுபவர்களிடம் காட்டுவது **"கருணா"** (கருணை). உத்தம குணமுள்ளவர்களிடம் மகிழ்ச்சி பொங்கிட செய்யும் அன்பு **"முதிதா"**, அதம குணமுள்ளவர்களிடம் விசேஷமாக அன்பை வைக்க முடியாவிட்டாலும் கொஞ்சம்கூட த்வேஷமேயில்லாமல், அவர்களிடம் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கியிருப்பது **"உபேக்ஷா"** (உபேக்ஷை).

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## நவராத்திரி கொலுப் போட்டி

வேதபாரதி நடத்தும் நவராத்திரி கொலுப்போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தங்கள் வீட்டு கொலுவினை சிறிய வீடியோ எடுத்து வாட்ஸ்அப்பில் அனுப்ப கேட்டுக்கொள்கிறோம். சிறந்த, கலை நயம்மிக்க, பொருள் பதிந்த கொலுவிற்கு பரிசுகள் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய தொலைபேசி எண்.**7397291043 / 9940331255**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# புரட்டாசி மாத விசேஷங்கள்

**(செப்டம்பர் 17.09.2020 முதல் அக்டோபர் 16.10.2020 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 17.09.2020 | புர 1 | வியாழன் | அமாவாசை, மஹாளயம் |
| 18.09.2020 | புர 2 | வெள்ளி | அப்பயதீட்சதர் ஜெயந்தி |
| 20.09.2020 | புர 4 | ஞாயிறு | சதுர்த்தி |
| 22.09.2020 | புர 6 | செவ்வாய் | சஷ்டி |
| 27.09.2020 | புர 11 | ஞாயிறு | ஏகாதசி |
| 28.09.2020 | புர 12 | திங்கள் | துவாதசி |
| 29.09.2020 | புர 13 | செவ்வாய் | ப்ரதோஷம் |
| 01.10.2020 | புர 15 | வியாழன் | பவுர்ணமி |
| 02.10.2020 | புர 16 | வெள்ளி | காந்திஜெயந்தி |
| 05.10.2020 | புர 19 | திங்கள் | சதுர்த்தி |
| 07.10.2020 | புர 21 | புதன் | சஷ்டி |
| 13.10.2020 | புர 26 | திங்கள் | ஏகாதசி |
| 14.10.2020 | புர 28 | புதன் | ப்ரதோஷம் |
| 16.10.2020 | புர 30 | வெள்ளி | அமாவாசை |

## 17.09.2020 வியாழன் - ஸர்வ மஹாளய அமாவாஸை

ஸ்ரீ ஸார்வரி நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வருஷ ருதௌ கன்யாமாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாம் புண்யதிதௌ வாஸர: அத்ய குருவாஸர யுக்தாயாம் பூர்வ பல்குனி நக்ஷத்திர யுக்தாயாம் விஷ்ணுயோக விஷ்ணுகரண ஸர்வ ஏவம் குண விஸேஷன விசிஷ்டாயாம் அஸ்யாம். அமாவாஸ்ய புண்யகாலே தர்ச ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபணே அத்ய கரிஷ்யே.

## 16.10.2020 வெள்ளி - அமாவாஸை

ஸ்ரீ ஸார்வரி நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வருஷ ருதௌ கன்யாமாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாம் புண்யதிதௌ வாஸர: அத்ய ப்ருகு வாஸர யுக்தாயாம் ஹஸ்த்த நக்ஷத்திர யுக்தாயாம் விஷ்ணுயோக விஷ்ணுகரண ஸர்வ ஏவம் குண விஸேஷன விசிஷ்டாயாம் அஸ்யாம். அமாவாஸ்ய புண்யகாலே தர்ச ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபணே அத்ய கரிஷ்யே.

# அட்டைப்பட விளக்கம்
# ஸ்ரீ அப்பய்ய தீட்க்ஷிதர்
# (1520 – 1593)

**"ஆரணி"** தற்போதைய திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒரு ஊர். இந்த ஊர் பட்டுப்புடவைக்குப் பெயர் பெற்றது. "ஆரணி பட்டு" என்பார்கள். ஆரணி வேலூர் பாதையில் உள்ள இந்த ஊரிலிருந்து 2 கி.மீ தூரத்தில் உள்ளது. **"அடையபலம்"** என்ற சிறிய கிராமம். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன், 16 ஆம் நூற்றாண்டில் அந்த கிராமத்தில் சில பிராமணர்கள் ஆசாரம், அனுஷ்டானம், அக்னிஹோத்ரம், யாகம் என பல புண்ணிய காரியங்களை மிகவும் சிரத்தையுடன் செய்துவந்துள்ளனர். அவர்களில் ஒருவர்தான் "ரங்கராஜாத்வரி". இவருக்கு திருமணம் ஆகி பல வருடங்கள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. தம்பதிகள் அவர்களுடைய குலதெய்வமான விரிஞ்சிபுரம் ஸ்ரீமரகதவல்லி ஸமேத ஸ்ரீ மார்க்க ஸஹாய சிவ பெருமானை வேண்டிக் கொண்டார்கள். அப்போது ஒரு அசரீரி "குழந்தாய் ரங்கராஜா நீ சிதம்பரம் வா உனக்கு அங்கு அருள்புரிகிறேன்" என்றது. தம்பதிகள் ஆனந்தத்தில் சிதம்பரம் சென்று நடராஜரை பூஜித்து தவமிருந்தார்கள்.

ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவருளால் அவர்களுக்கு பிரமாதீச வருஷத்தில், புரட்டாசி (கி.பி. 1520) மாதம் சோமவாரம், கிருஷ்ணபக்ஷம் பிரதமை, உத்திரட்டாதி நக்ஷத்ரத்தில் கன்யா லக்னத்தில் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தைக்கு **"விநாயக சுப்ரமணியன்"** என்று பெயர் சூட்டினார்கள். எல்லோரும் குழந்தையை **"அப்பா"** **"ஐயா"** என்று கொஞ்சி அழைத்தார்கள். அப்படி கொஞ்சி அழைத்த பெயரே **"அப்பய்யன்"** என்றே நிலைத்துவிட்டது.

ஸ்ரீரங்கராஜாத்வரி தானே தன் குழந்தைக்கு அக்ஷராப்யாஸம் செய்வித்து **"குருராமகவி"** என்றகவியின் மூலம் மற்ற கல்விகளை கற்பித்தார். ஐந்துவயதிலேயே அப்பய்யர் எல்லா எழுத்து ஞானமும், பாஷா ஞானமும் பெற்றார். 7ஆவது வயதில்

அவருக்கு உபநயனம் செய்து வைக்கப்பட்டது. பால்யப்பருவம் போய் யௌவனப்பருவம் வந்தது. தம்மிடம் வாதம் செய்யவந்த **"ரத்னகோட தீக்ஷதர்"** என்ற மஹா வித்வானின் மகளான **"மங்களாம்பிகையை"** திருமணம் செய்துக் கொண்டார்.

திருமணமானதும் தம் மனைவியுடன் **"பிரம்மவாஸ்து"** என்றஇடத்தில் வசித்துக்கொண்டு ச்ரௌத, ஸ்மார்த்த கர்மாக்களை அனுஷ்டானம் செய்துக்கொண்டும் பல தேசத்து சிஷ்யர்களுக்கு பாடங்களைப் போதித்துக் கொண்டிருந்தார்.

அந்த காலத்தில் வேலூரரை **"சின்ன பொம்ம நாயக்கர்"** என்றஅரசன் ஆண்டுவந்தான். அவரிடம் அப்பய்ய தீக்ஷிதரின் தந்தை தலைமை பண்டிதராக இருந்தார். அவர் மறைந்த பிறகு அப்பய்ய தீக்ஷிதரே அந்தப் பொறுப்பை ஏற்றார். அரசர் அவரை ஆஸ்தான வித்வானாக நியமித்து கவுரவித்தார். அதே சபையில் **"தாதாசாரியர்"** என்றவித்வானும் அங்கம் வகித்திருந்தார். அவர் அப்பய்ய தீக்ஷிதரின் கீர்த்தி மேலும் மேலும் பெருகுவதை பொறுக்க முடியாமல் அரசருக்கு தீக்ஷிதர் மீது வெறுப்பு ஏற்படும் படி பல செயல்களைச் செய்தார்.

ஒரு சமயம் அப்பய்ய தீக்ஷிதர் ஒரு யாகம் செய்தார். அந்த யாக குண்டத்தில் அரசர் தமக்கு அளித்த பொன்னாடையை போட்டு எரித்துவிட்டார். அரசர் மிகவும் மனம் வருந்தி அப்பய்ய தீக்ஷிதரிடமே இதைக் கேட்டார். அதற்கு அப்பய்ய தீக்ஷிதர் "அரசே நீங்கள் அளித்த அந்த பொன்னாடையை அணியும் தகுதியுடையவர் சிதம்பரம் நடராஜர்தான். அதனால் அதை நடராஜருக்கே அளித்துவிட்டேன்" என்றார். மறுநாள் காலையில் அரசர் சிதம்பரம் கோயிலுக்குச் சென்று பார்த்த போது தாம் தீக்ஷிதருக்கு அளித்த பொன்னாடையை நடராஜ விக்ரஹத்தின் மேல் இருந்ததைக் கண்டார். அரசர் பக்தி பரவசத்துடன் நடராஜர் முன் விழுந்து வணங்கினார்.

தீக்ஷிதர் ஒரு சித்த புருஷர். ஒரு சமயம் தன்னுடைய ஆத்மா முழுவதும் சிவனிடம் ஈடுபட்டிருக்கிறதா என அறிய தானே ஒரு பரிசோதனையை நிகழ்த்தினார். தன் சீடர்களை அழைத்து "நான் தற்போது இந்த ஊமத்தச் சாற்றைகுடிக்கப்போகிறேன். உடனே நான் தன்நிலை மறந்து

*உன்மத்தம் பிடித்தவன் போல் ஆகிவிடுவேன். அப்போது என் உணர்விலே, பேச்சிலே ஏற்படும் மாற்றங்களை ஒன்று விடாமல் குறித்துக் கொள்ளுங்கள். மூன்று மணி நேரத்திற்கு அப்பால் இந்த சீசாவில் இருக்கும் மாற்று மருந்தை எனக்கு கொடுங்கள் நான் பழைய நிலைக்கு வந்துவிடுவேன்'' என்றார். சிஷ்யர்களும் அவ்வாறே செய்தார்கள். உன்மத்த நிலையை அடைந்த தீட்க்ஷிதர் இறைவன் மீது ஐம்பது ஸ்லோகங்களை பாடினார். அவை "உன்மத்த பஞ்சாசத்'' அல்லது "ஆத்மார்ப்பணஸ்துதி'' என்று ஒரு தனி நூலாக விளங்குகிறது.*

**வேளச்சேரியில் அப்பய்ய தீக்ஷிதர் :**

*அப்பய்ய தீட்க்ஷிதர் தம்முடைய தீர்த்த யாத்திரையில் சென்னையை அடுத்த "வேதச்ரேணி'' (தற்போதைய வேளச்சேரி) கிராமத்திற்கு வந்து தங்கியிருந்தார். அப்போது நாள்தோறும் திருவான்மியூர் சென்று சிவதரிசனம் செய்த பிறகே உணவு உட்கொள்வாராம். ஒரு சமயம் திருவான்மியூர் வெள்ளத்தில் மூழ்கிய போது "இன்று உமது தரிசனமின்றியே உண்ண வேண்டுமா?'' என்று உரத்த குரலில் சிவபெருமானை கேட்டாராம். அப்போது கிழக்கு நோக்கி இருந்த இறைவனது சந்நிதி மேற்கு முகமாய் திரும்பியதாம். இக்கோயிலில் அப்பய்ய தீட்க்ஷிதர் சிலை உள்ளது.*

*தீட்க்ஷிதர் வேளச்சேரியில் இருந்த போது தினமும் தண்டீஸ்வரரை வணங்கிவந்தார். அப்போது இந்த கோயிலில் அம்பாள் சந்நிதி இல்லை. தீட்க்ஷிதர் ஒரு வேள்வியை நடத்தி ஒரு தீர்த்தத்தை ஏற்படுத்தினார். அதுவே "அப்பய்ய தீர்த்தம்'' என்றும் "அப்பளங்குளம்'' என்றும் வழங்கலாயிற்று. தீட்க்ஷிதர் அம்பாளை பிரதிஷ்டை செய்து ஒரு சக்கரத்தையும் ஸ்தாபித்தார். இந்த சக்கரத்தை இன்றும் அம்பாள் சந்நிதியில் தரிசிக்கலாம். இங்குள்ள சண்டேஸ்வரர் சந்நிதியில் உள்ள இரண்டு சிலைகளில் ஒன்று அப்பய்ய தீட்க்ஷிதருடையது என்று கருதப்படுகிறது.*

*அப்பய்ய தீட்க்ஷிதர் வேதாந்த பரமாக 25 கிரந்தங்களையும், சிவாத்வைத விஷயமாக 26 நூல்களையும், மீமாம்ஸா சாஸ்திரம் பற்றி ஏழு நூல்களையும், காவ்ய வியாக்யானம் ஒன்றும், வியாகரண வியாக்யானம் ஒன்றும்,*

அலங்கார சாஸ்திரம் பற்றி மூன்று நூல்களும், ஸ்தோத்திர நூல்கள் 26 மற்றும் பலவகைப்பட்ட நூல்கள் 15ம் ஆக 104 நூல்களை இயற்றியுள்ளார். அதனால் இவரை **"சதுரதிகசதப்ரபந்தகர்த்தா''** என்றும் அழைக்கிறார்கள். இவைகளில் **"ஸ்ரீ மார்க்கபந்து ஸ்தோத்திரம்''** மிகவும் புகழ் பெற்றது.

அந்திம காலத்தில் அப்பய்ய தீட்க்ஷிதர் சிதம்பரத்தில் இருந்துவந்தார். 1593-ம் வருடம் தமது 73-வது வயதில் ஒரு நாள் காலை நடராஜனோடு கலந்து மோட்ஷம் அடைந்தார். இவர் இந்து சமயத்தின் தூண்களான கருமம், பக்தி, ஞானம் இவை மூன்றிற்கும் ஒரு இணையற்றமுன்மாதிரியாகவே இருந்து மறைந்தார்.

இந்த வருடம் இவருடைய ஜெயந்தி 18.09.2020 வெள்ளிக்கிழமை அன்று அவருடைய பாத கமலங்களை நினைத்து வணங்குவோம்.

**ஸ்ரீ மார்க்க பந்து ஸ்தோத்திரம் 200 குழந்தைகளுக்கு வேதபாரதி மூலம் மதுரை ஸ்ரீமதி நீலா முரளிதரன் அவர்களால் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.**

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

உ

ஸ்ரீ குருப்யோ நம:

## வேதபாரதியில் தற்போது நடைபெறும் வகுப்புகள்

***இளம் சிறார்களுக்கு ஸ்லோக வகுப்புகள்***

***பெரியவர்களுக்கு ஸ்தோத்திர வகுப்புகள் :***

*ஸ்ரீமதி நீலா முரளி அவர்கள் மதுரை, 94434 89129*

***ஸ்ரீ ருத்ர வகுப்புகள் :***

*ஸ்ரீ சங்கர், நங்கநல்லூர், 9445102193*

***ஆத்திசூடி — கொன்றை வேந்தன்***

*ஸ்ரீ ராமசுப்ரமணியன் ஜி, தாம்பரம், 7397460064*

*ஸ்ரீ பட்டாபிராமன், புதுவை - 98426 02436*

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 17



**அத்தியாயம் – 1 தொடர்ச்சி....**

ஹனுமான் கொடியை உடைய தேரில் அமர்ந்த பாண்டுவின் மகன் அர்ஜுனன், என்று சென்றமாத முடிவில் பார்த்தோம். அர்ஜுனன் தேரில் ஹனுமான் கொடி எப்படி வந்தது?

மஹாபாரதத்தில் திரௌபதி பீமனிடம் தான் விரும்பிய **"சுகந்திகா"** என்ற புஷ்பத்தைக் கொண்டுவரும்படி கேட்கிறாள். அதற்கு சம்மதித்த பீமன் காட்டின் வழியாகச் சென்று ஒரு நதிக்கரையோரமாகச் செல்லும்போது ஒரு மிகப்பெரிய குரங்கு மலைப்போல் வழியை மறைத்து படுத்துக்கொண்டிருந்தது. பீமன் அதனிடம் தனக்கு வழிவிடும்படி கேட்டான். ஆனால் அந்தக் குரங்கு "எனக்கு வயதாகிவிட்டது முடிந்தால் என் வாலை நீக்கிவிட்டு அந்த வழியாக நீ போ" என்றது. ஆனால் பீமனால் வாலைத் தொடக்கூட முடியவில்லை. "நீ யார்?" என்று பீமன் கேட்டதும் "நான் தான் ஆஞ்சநேயர்" என்றது அந்த குரங்கு. ஆஞ்சநேயரும், பீமனும் வாயுவின் புத்திரர்கள் என்பதால் பீமன் தன்னை விட மூத்தவரான ஆஞ்சநேயரை நமஸ்கரித்து மன்னிப்பு கேட்டு "யுத்தத்தில் நாங்கள் வெற்றி பெற நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். அதற்கு சம்மதித்த ஆஞ்சநேயர் "அர்ஜுனன் கொடியில் நான் இருந்து வெற்றியைத் தேடிக்கொடுப்பேன்" என்றான். அதனால்தான் அர்ஜுனன் ஹனுமான் கொடியை தேரில் வைத்துள்ளான்.

யுத்தத்திற்கு தயாரான அர்ஜுனன் தேரில் அமர்ந்துக்கொண்டு தேரோட்டியாக உள்ள பகவானிடம்

**ஸேனயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேச்யுத (கீதை 1-21)**

“அச்யுதா, ரதத்தை இரண்டு சேனைகளுக்கும் நடுவில் நிறுத்துங்கள். இப்போர்களத்தில் யுத்தம் செய்ய வந்திருக்கும் வீரப் பெருமக்களை நான் பார்க்க வேண்டும்” என்று கூறுகிறான்.

இங்கு பகவான் சாரதி என்றநிலையில் உள்ளதால் அர்ஜுனனின் ஆணைகளை நிறைவேற்றவேண்டும். அதற்கு அவர் சிறிதும் தயங்கவில்லை. அவர் தேரோட்டியாக இருந்தாலும் அவருடைய தெய்வீகமான நிலைக்கு இழிவு ஏதும் ஏற்படவில்லை. தன்னுடைய தூய பக்தன் தனக்கு ஆணையிடும் வாய்ப்பை பகவான் எதிர்நோக்குகிறார்.

அர்ஜுனன் கேட்டுக்கொண்டதுபோல் பகவான் கிருஷ்ணரும் தேரை இரண்டு சேனைகளுக்கு மத்தியில், பீஷ்மருக்கும் துரோணருக்கும் எதிரில் நிறுத்தி “அர்ஜுனா எல்லோரையும் பார்” என்கிறார். ஏன் எல்லோரையும் பார்த்துக்கொள் என்று பகவான் அர்ஜுனனிடம் சொன்னார்? **“யுத்தம் செய்”** என்று அல்லவா சொல்லியிருக்கவேண்டும். காரணம் அங்கு இருந்த எல்லா அரசர்களும் அர்ஜுனனின் சொந்தக்காரர்கள். அவர்களைப் பார்த்ததும் “இவர்களை நான் கொல்லமாட்டேன்” என்று அவனுடைய மனதில் உள்ள அன்பை வெளிப்படுத்தவேண்டும், அதன் பின் அவன் யுத்தத்திலிருந்து பின்வாங்கவேண்டும், அதற்குப் பின் அவனுக்கு தைரியத்தையும், ஞானத்தையும் கொடுக்கவேண்டும் என்று பகவான் நினைத்தார்.

அர்ஜுனன் போர்களத்தில் தனது தந்தையின் நண்பனான பூரீஸ்வரன் போன்றவர்களையும், பீஷ்மபிதாமஹர், சோமதத்தர் போன்ற ஆசிரியர்களையும் ஸல்யன், சகுனி போன்றமாமாக்களையும் துரியோதனன் போன்ற தம்பிகளையும், அஸ்வத்தாமன் போன்ற நண்பர்களையும், க்ருதவர்மன் போன்ற நன்மை விரும்பிகளையும் மற்றும் பல நண்பர்களையும் பார்த்தான்.

உற்சாகமாக போரிட வந்த அர்ஜுனன் இவர்களை எல்லாம் பார்த்ததும் மிகவும் தைரியம் இழந்து கோழையைப் போல் மனம் வருந்தி பேசத் தொடங்கினான்.

முதல் அத்தியாயம் தொடரும்

# உண்மையான பக்தி

தெய்வம் என் அருகே அமர்ந்து கொண்டிருக்கிறது. என் பக்தியின் வலிமையே வலிமை என அர்ஜுனனின் மனம் பாரதப் போரின் வெற்றியில் திளைத்துக் கொண்டிருக்கிறது.

உன்னைவிட என் மேல் கூடுதலாக பக்தி செலுத்துபவர்கள் உலகில் இருக்கக் கூடாதா என்று கிருஷ்ணர் கேட்டார்.

என் மனதில் ஓடுகிற எந்தச் சிறு சிந்தனையையும் உடனே படித்து விடுகிறானே கிருஷ்ணர் என அர்ஜுனன் திடுக்கிட்டான்.

அர்ஜுனனின் பக்தி சார்ந்த கர்வத்தை அடக்க கிருஷ்ணர் முடிவு செய்தார். அர்ஜுனா நான் பெரிதும் மதிக்கும் எனது பக்தை பிங்கலை இங்கே அஸ்தினாபுரத்தின் அருகில் வசிக்கிறாள். அவளைச் சென்று சந்திப்போம் வா என்று கிருஷ்ணர் அழைத்தார். இதே தோற்றத்தில் போனால் உன் உயிருக்கு ஆபத்து நேரலாம். நான் பெண்ணாக மாறுகிறேன். நீயும் என் தோழியாக மாறு என்றான். சற்று நேரத்தில் அரண்மனையிலிருந்து கிருஷ்ணரும் அர்ஜுனனும் பெண்களாக மாறி பிங்கலையின் வீட்டுக் கதவை தட்டினர்.

தெய்வீக ஒளியுடன் ஒரு மூதாட்டி கதவைத் திறந்தாள். தாயே நாங்கள் அடுத்த ஊருக்குச் செல்வதற்காக நடந்துவந்தோம். கால்கள் வலிக்கின்றன. இங்கே சற்று இளைப்பாறி விட்டுச் செல்லலாமா என்று கேட்டார் கிருஷ்ணர்.

உள்ளே வாருங்கள், நான் பூஜை செய்து கொண்டிருக்கிறேன். பூஜை முடிந்த பிறகு நீங்கள் உணவருந்திவிட்டுச் செல்லலாம் என்றாள் பிங்கலை.

பூஜையறையில் ஒரு பீடத்தில் கிருஷ்ண விக்கிரகமும் சிறியதாக ஒரு கத்தியும் நடுத்தர வடிவில் ஒரு கத்தியும் பெரியதாக ஒரு கத்தியும் இருந்தன.

தாயே கிருஷ்ண விக்கிரகத்தோடு மூன்று கத்திகளையும் பூஜிக்கிறீர்களே, கத்திகள் யாருடையவை? என்று கிருஷ்ணர் கேட்டார்.

என்னுடையவைதான் வாய்ப்பு கிட்டும் போது கிருஷ்ணனுக்குக் கொடுமை செய்த என் விரோதிகள் மூவரைக் கொல்ல வேண்டும் அதற்காக மூன்று கத்திகள்

வைத்திருக்கின்றேன் என்றாள்.

யார் அந்த விரோதிகள் தாயே என்று கேட்டார் கிருஷ்ணர். குசேலன், திரௌபதி, அர்ஜுனன் இந்த மூவரும் என்றாள்.

குசேலரைக் கொல்ல சின்னக் கத்தி, திரௌபதிக்கு நடுத்தர கத்தி, மாவீரன் என்று தன்னைப் பற்றிப் பிதற்றிக் கொண்டு திரியும் அர்ஜுனனைக் கொல்ல இந்தப் பெரிய கத்தி என்றாள்.

அர்ஜுனனுக்கு தூக்கிவாரிப் போட்டது. இந்த மூவரும் கிருஷ்ணருக்கு என்ன கொடுமை செய்தார்கள் தாயே என்று கேட்டார் கிருஷ்ணர்.

குசேலன் அந்த தவிட்டு அவலைக் கிருஷ்ணருக்கு கொடுக்கலாமா? என் கிருஷ்ணர் வெண்ணெயை விரும்பித் தின்பவன். வாய் உறுத்தாத ஆகாரம் அது. அவல் என் கிருஷ்ணரின் நீண்ட தாமரை இதழ் போன்றநாவில் புண்ணைத் தோற்றுவிக்காதா! இந்த புத்திகூட இல்லாமல் பக்தி என்றபெயரில் அவலை அவனுக்கு கொடுத்தான். ஆகவே அவனுக்கு சிறிய கத்தி என்றாள்.

திரௌபதி எப்படி உங்கள் விரோதியானாள் என்று கேட்டார் கிருஷ்ணர்.

அஸ்தினாபுரத்தில் இருக்கும் திரௌபதிக்கு துவாரகையில் இருக்கும் கிருஷ்ணர் வாரி வாரிப் புடவைகளை அருளினானே புடவைகளை இழுத்து இழுத்து துச்சாதனன் கைவலிக்க மயக்கம் போட்டு விழுந்தான். புடவையை இழுத்த துச்சாதனனுக்கு கைவலிக்குமானால் புடவைகளை நிறுத்தாமல் தொடர்ந்து வழங்கிய கிருஷ்ணருக்கு கை எவ்வளவு வலித்திருக்கும். கிருஷ்ணரின் கைகளை வலிக்கச் செய்த திரௌபதியை சும்மா விடுவேனா அவளுக்கு நடுத்தர அளவுள்ள கத்தி என்றாள்.

அர்ஜுனன் கிருஷ்ணரின் பக்தர்களிலேயே தலை சிறந்தவனாயிற்றேஅவன் மேல் ஏன் விரோதம் என்று கேட்டார் கிருஷ்ணர்.

தொடரும்....

**ராமன், வேளச்சேரி**

# மாலைமாற்று

ஒரு மொழியின் தொன்மையையும், ஆழத்தையும் உணர்ந்து கொள்ள கருவியாய் அமைவது, அம்மொழியில் அமைந்துள்ள இலக்கியங்கள். தமிழில் உள்ள இலக்கியங்களை இரசிக்க ஒரு ஆயுள் போதாது என்பதே உண்மை.

தமிழ் இலக்கியங்களில் உள்ள ஆச்சரியமான, காலத்தைக் கடந்து நிற்கும் கருத்துகளை பல்வேறு இலக்கியவாதிகள் ஆராய்ந்திருக்கிறார்கள். எழுத்தாளர் சுஜாதாவின் 'கற்றதும் பெற்றதும்' தொகுதியில் இவ்வாறான பல குறிப்புகளைக் காணலாம். அவ்வாறு நான் படித்து வியந்த ஒரு பகுதி.

'Palindrome' என்பதை தமிழில் இருவழிச் சொல், பின்பி அல்லது மாலைமாற்று என வழங்குவர். தமிழில் விகடகவி, குடகு, கைரேகை போன்றசொற்கள் மாலைமாற்றுகள் ஆகும். ஆங்கிலத்தில் Level, Malayalam போன்றசொற்கள் அனைவரும் அறிந்ததே.

'மாலைமாற்று" என்பதின் பெயர்க்காரணம் மிக அழகாக அமைந்துள்ளது. துளசி மணிகளாலான ஜபமாலை சிவப்பு கட்டிய இடம் வரை உருட்டினால், ஒரு சுற்று, இந்த இடத்தை அடைந்ததும் மீண்டும் பின்னோக்கி மணிகளை உருட்டுவர். அதேபோல ஒரு வார்த்தையையோ, வாக்கியத்தையோ இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ வாசிக்கும் போது ஒன்று போல் இருப்பது மாலைமாற்று.

'Palindrome' என்றகிரேக்க வழி ஆங்கிலச் சொல் Ben Johnson என்பவரால் 17 ஆம் நூற்றாண்டில் வழங்கப்பட்டது.

தமிழ்மொழியின் ஆச்சரியம் என்னவென்றால், மாலைமாற்றில் ஒரு பதிகமே திருஞானசம்பந்தர் மூன்றாம் திருமுறையில் அமைத்துள்ளார். திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலம் 7 ஆம் நூற்றாண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

**திருஞானசம்பந்தர் மூன்றாம் திருமுறைபதிகம்:**
**375, சீகாழி**

**திருமாலைமாற்று பதிகம்:**

1. *யாமா மாநீ யாமாமா யாழீ காமா காணாகா*
*காணா காமா காழீயா மாமா யாநீ மாமாயா*

2. *யாகா யாழீ காயாகா தாயா ரார்ரா தாயாயா*
*யாயா தாரா ராயாதா காயா காழீ யாகாயா*

3. *தாவா மூவா தாசாகா ழீநா தாநீ யாமாமா*
*மாமா யாநீ தாநாழீ காசா தாவா மூவாதா*

4. *நீவா வாயா காயாழீ காவா வானோ வாராமே*
*மேரா வானோ வாவாகா ழீயா காயா வாவாநீ*

5. *யாகா லாமே யாகாழீ யாமே தாவீ தாயாவீ*
*வீயா தாவீ தாமேயா ழீகா யமே லாகாயா*

6. *மேலே போகா மேதேழீ காலா லேகா*
*யேனா லாகா லேலாகா ழீதே மேகா போலேமே*

7. *நீயா மாநீ யேயாமா தாவே ழீகா நீதானே*
*நேதா நீகா ழீவேதா மாயா யேநீ மாயாநீ*

8. *நேணவ ராவிழ யாசைழியே வேகத ளேரய ளாயுழிகா*
*காழியு யாளரி ளேதகவே யேழிசை யாழவி ராவணனே*

9. *காலே மேலே காணீகா ழீகா லேமா லேமேபூ*
*பூமே லேமா லேகாழீ காணீ காலே மேலேகா*

10. *வேரியு மேணவ காழியொயே*
*யேனைநி ணேமட யோகரதே*
*தேரக ளோடம ணேநினையே*
*யேயொழி காவண மேயுரிவே.*

11. *நேரக ழாமித யாசழிதா யேனனி*
*யேனனி ளாயுழிகா*
*காழியுய ளாநின யேனினயே தாழிச*
*யாதமி ழாகரனே*

திருச்சிற்றம்பலம்

**பாடலின் பொருள்**

| | | |
|---|---|---|
| *யாம் ஆமா* | - | *யாம் ஆன்மா என்னும் பசு, சீவாத்மா* |
| *நீ ஆம் மாமா* | - | *நீ பெரிய ஆன்மா, பரமாத்மா* |
| *யாழ் ஈ காமா* | - | *யாழிசை நல்கிய என் ஆசைப் பொருளே* |
| *காணாகா* | - | *இப்படியெல்லாம் கண்டு என்னைக் காப்பாற்று* |
| *காணாகா* | - | *இப்படியெல்லாம் பிரித்துக் காணாமல் என்னைக் காப்பாற்று* |
| *காழீயா* | - | *சீர்காழியானே* |
| *மாமாயா நீ* | - | *அம்மை அம்மை ஆம் நீ* |
| *மாமாயா* | - | *(இப்படி) பெரிய மாயமானவனே* |

*'என்பது முதல் பாடலின் பொருள்'.*

*இதைத் தவிர எளிய தொடர்களும் உள்ளன.*

*'மாலா போலாமா'*
*'தேரு வருதே'*
*'தோடு ஆடுதோ'*
*'மேள தாளமே'*
*'மோக ராகமோ'*

*இவ்வாறான அற்புதங்களைக் கொண்டடக்கியுள்ள தமிழ்மொழி தாய்மொழியாக அமைந்தது மிகப் பெரிய வரம்.*

*29 மொழிகளை அறிந்த பாரதியார் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி இனிதாவது எங்கும் காணோம்'' எனக் கூறியது ''உண்மை வெறும் புகழ்ச்சியில்லை''. 'தெள்ளுற்றதமிழமுதின் சுவை காணுவோம்''*

**வெ. சிவசங்கரி**

# சுபாஷிதம் — 19

*"சுபாஷிதம்" என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள் இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.*

**1) ஆதௌ மாதாகுரோ: பத்னி ப்ராஹ்மணீ ராஜபத்னிகா**
**தேனுர்தாத்ரீ ததாப்ருத்வீ ஸப்தைதா மாதர: ஸ்ம்ருதா:**

*பிறப்பளித்த தாய், குருவின் மனைவி, அந்தணரின் மனைவி, ராணி, பசு, செவிலி, பூமி இந்த ஏழ்வரும் போற்றுதலுக்குரிய தாயெனக் கருதப்பட வேண்டியவர்கள்.*

**2) அகாலோநாஸ்தி தர்மஸ்யஜீவிதே சஞ்சலே ஸதி**
**ஈருஹீத: இவகேசேஷு ம்ருத்யுனா தர்மம் ஆசரேத்**

*வாழ்வின் நிலையாமைக்கு முன் தர்மத்தைக் கடைப்பிடிக்கச் சாதகமான நாள் நேரம் எதுவுமில்லை. 'சிரத்தின்மேல் அமர்ந்திருக்கிறது மரணம்' என்றுணர்ந்து இந்த நொடியிலிருந்து தர்மத்தை கடைப்பிடியுங்கள்.*

**3) புதித: ப்ரபாவ: தேஜஸ்ச்ச ஸத்வமுத்தானமேவச**
**வ்யவஸாயஸ்ச்ச யஸ்யாஸ்தி தஸ்ய வ்ருத்திபயம் குத:**

*அறிவு, தியாகம், பொலிவு, வலிமை, உற்சாகம், உழைக்கும் ஈடுபாடு இவற்றைஉடையவனுக்கு எப்படி வாழப் போகிறோமோ? என்றஅச்சம் இருப்பதில்லை.*

**4) த்ருஷ்டிபூதம் ந்யஸேத்பாதம் வஸ்த்ரபூதம் ஜலம் பிபேத்**
**ஸத்யபூதா வதேத் வாசம் மன: பூதம் ஸமாசரேத்**

*நுட்பமான பார்வையால் எடுத்து வைக்கும் அடுத்த சுவடும், வடிகட்டும் துணியால் குடிநீரும், உண்மையால் பேச்சும், மனதின் ஒழுக்கத்தால் நடத்தையும் தூய்மையடைகின்றன.*

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

தொகுப்பு : **பரிதி**

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## கங்கை - பாவங்களைப் போக்கும் புண்ணிய நதி



சென்றமாத தொடர்ச்சி...

சொல்லிக் கொடுத்ததைப் போலவே, அவள், ‘‘பாவமே செய்யாதவன் தான் என் கணவரைத் தொட முடியும். ஆகையால் பாவம் செய்தவர்கள் எவரும் அவரிடம் போக வேண்டாம்’’ என்று அவர்களை எச்சரித்தாள். ஒருவனைத் தவிர மற்ற அனைவரும் பின்தங்கி விட்டார்கள். அம்மனிதன் கங்கையில் குதித்து, அவள் கணவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து கரை சேர்த்தான்.

பார்வதி தனது உளமார்ந்த நன்றியை அவனுக்குத் தெரிவித்துவிட்டு, “பாவமற்றவன்தான் என் கணவரைத் தொடமுடியும் என்று நான் கூறியிருந்தேன். உன்னால் எப்படி அவரைத் தொட முடிந்தது? நீ என்ன, பாவமே செய்யாதவனா?” என்று தனது சந்தேகத்தை அவனிடம் கேட்டாள். அதற்கு அம்மனிதன், “ஆமாம். நான் பரிசுத்தமானவன். நான் கங்கையில் குதித்த பிறகு தானே உங்கள் கணவரைக் காப்பாற்றினேன்? கங்கையை நான் தொட்டவுனேயே என் பாவங்களெல்லாம் தொலைந்தது. நான் தூய்மையாகிவிட்டேன்’’ என்று பதிலளித்தான். பார்வதியும் சிவனும் பிறகு அங்கிருந்து புறப்பட்டு, மீண்டும் ஆகாய மார்க்கமாகத் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். பார்வதியை நோக்கி சிவன், “இவனைப் போல் திடமான நம்பிக்கையுள்ளவனின் பாவங்களை கங்கை நிச்சயம் நீக்குவாள்” என்று கூறினார்.

கங்கை, மக்களின் பாவங்களைப் போக்குவது என்பது உண்மையே. அவளை அணுகுவோரிடம் உறுதியான நம்பிக்கையிருந்ததேயானால், அவர்கள் கங்கையால் நன்கு பயனடைவார்கள். இருப்பினும், வேண்டுமென்றே பாவம் செய்வோரையும் கங்கை புனிதப்படுத்துவாள் என்று இதற்கு அர்த்தமில்லை.

முற்றும்.

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

### ஒன்றே பலவாக



இப்படி கங்கை வந்தது ஒரு கார்த்திகை அமாவாசையில். இப்போதும் அந்தப் புனித தினத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் திருவிசநல்லூரில் அந்தக் கிணற்று ஜலத்தில் ஸ்நானம் செய்தால் -- பலன் கிடைக்கும் என்று நம்பிச் செய்து வருகிறார்கள்.

அய்யாவாள், ஸீதா கல்யாணத்துக்கு முன்னால் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி, சிவதநுஸை ஒடித்த விஷயத்தை ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார். அங்கே ஸ்வகர ப்ரதி பாடித ஸ்வசாப என்கிறார். அதாவது தன் கையாலேயே தன் வில்லை ஒடித்துக் கொண்டார் என்கிறார். சிவதநுஸ் ஏற்கனவே நாராயணனால் விரிசல் ஆகிவிட்டது. அப்புறம் நாராயணன் ஸ்ரீராமனாக வந்து அதை நன்றாக ஒடித்துப் போட்டு விட்டார்" என்பதாக இந்த த்தனுர்பங்க சமாசாரத்தை வைத்து ஈச்வரனைத் தாழ்த்திப் பேசுவது நீண்ட காலமாக வந்த ஒரு வாதம். ஆனால் சமரசமாக பார்த்த அய்யாவாளுக்கோ, சிவ விஷ்ணு பேதமே தெரியவில்லை. சிவனேதான் விஷ்ணு, விஷ்ணுவேதான் ராமன், ஆகையினால் ராமனும் சிவனும் ஒன்றுதான். சிவதனுஸ் என்றால் அதுவே தான் ராம தநுஷாம், தன் கையால் தன் வில்லையே முறித்துப் போட்டார்; அவருடைய லீலைக்கு இதெல்லாம் வேண்டியிருக்கிறது என்று எழுதிவிட்டார்.

தொடரும்....

**வாசகர்கள் கவனத்திற்கு** : வேதபாரதி செய்திகள் படித்துவிட்டு நிறைய நண்பர்கள் தொலைபேசி மூலமாக கருத்துக்களை என்னிடம் தெரிவிக்கிறார்கள் தயவு செய்து வாட்ஸ்அப் மூலம் பதிவு செய்தால் மட்டுமே புத்தகத்தில் வாசகர் கடிதத்தில் பதிவு செய்ய முடியும்.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier





**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

குரு பக்தியில் தன்னிகரில்லாதவர் - தவசீலர் - **அன்பே உருவானவர்** - ஏழை பங்காளர் - அகிலம் போற்றும் நல்லவர் - நமது ஸ்ரீ மாதா டிரஸ்ட் உருவாக்க பணித்தவர் - **இந்த நல்லவரின் பிறந்த நாளான 5.8.2020 அன்றே, அவர் மிகவும் பாடுபட்டு முயற்சி எடுத்த ஸ்ரீ ராமபிரானின் ஆலயம் உலகம் வியக்கும் வண்ணம் அயோத்தில் அமைந்திட அடிக்கல் நாட்டப்பட்டது;** புனிதம் நிறைந்த அந்நாளே **ஸ்ரீ மாதா டிரஸ்ட்** தனது சேவைபயணத்தில் 20 ஆண்டுகள் முடித்து 21-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பொன்னாளாக அமையப்பெற்றது நமது **காஞ்சி மாமுனிவரின்** அருளாசியே...!!




ஸ்ரீ மடத்தில், நம் நெஞ்சில் நிலைத்து வாழும் ஸ்ரீ காஞ்சி மாமுனியின் திருவுருவச் சிலையை தரிசிக்கும் **ஸ்ரீ மாதா டிரஸ்ட்** நிர்வாக அறங்காவலர் **திரு கிருஷ்ணமூர்த்தி** அவர்களுடன் அறங்காவலர் **திரு வளசை ஜெயராமன்**

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**21** ஆண்டுகளுக்கு முன்னர்
ஸ்ரீ பெரியவா அவர்களின்அருளால் ஸ்ரீ மாதா டிரஸ்ட்
என்னும் விருட் சத்திற்கான விதை இடப்பட்பட்டது.
1999-ம் ஆண்டு ஒரு நாள் நமது நிர்வாக அறங்காவலரை
அழைத்த பெரியவா "ஐ.ஓ.சி; நீ இந்தியன் ஆயில் வேலைய விட்டுடு;
ஏழை புற்றுநோயாளிகளை காப்பாத்தற தர்ம கார்யத்தை ஏத்துக்கோ"
என்றார்; ஸ்ரீ பெரியவா அவர்களின் கட்டளையை ஏற்ற நமது நிர்வாக
அறங்காவலரை, ஸ்ரீ பெரியவா திருப்பதிக்கு அழைத்துச் சென்று அங்கு
ஸ்ரீ பாலாஜியின் முன் தியானம் செய்து சொன்னார் "நீ தொடங்கப்போற
தர்ம ஸ்தாபனத்துக்கு "**ஸ்ரீ மாதா டிரஸ்ட்**"னு பேர் வெச்சுக்கோ; எல்லாம்
நல்லபடியா வரும்" என்று ஆசீர்வதித்தார். அது முதல் ஸ்ரீ மாதா டிரஸ்ட்
ஏழை புற்றுநோயாளிகளை தாயன்புடன் பாதுகாத்து வருகிறது.

மேலும், தற்போதைய ஊரடங்கினால் வாழ்வாதாரம் இன்றி
தவிக்கும், எளிய மக்களின் பசி தீர்க்கும் திருப்பணியையும்
ஸ்ரீ மாதா டிரஸ்ட் தொய்வின்றி செய்து வருகிறது.

அன்பு வாசகர்களே, எளிய மக்கள் பசியாறும்
உணவின் பருக்கைகளில் உங்கள் பெயர் இருப்பதைக்
காட்டிலும் வேறு பாக்கியம் என்ன இருக்கப்போகிறது?
இந்த புண்ணியம்தான் நமது சந்ததியினருக்கு
நாம் சேர்த்து வைக்கும் காலத்தால் அழியாத சொத்து...!!
**சிந்தியுங்கள் ! உடனடியாக செயல்படுங்கள் !**

**2001**-ம் ஆண்டு **ஸ்ரீ பெரியவா** அவர்கள் நமது
தர்மசாலாவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில்...
"இது ஒசந்த தர்மம் இந்த கிருஷ்ணமூர்த்தி என் பரமார்த்த
சிஷ்யன்; மற்றவர்களின் பொருள், பணத்திற்கு ஆசைப்
படாதவன்; ஆன்மீக சிந்தனையும், பொதுச்சேவை
எண்ணமும் உடையவன்;எல்லாவற்றிற்கும் மேல் ரொம்ப
நம்பிக்கையானவன். சிகிச்சைக்காக வரும் ஏழை புற்று
நோயாளிகளின்வயிறு வாடாமல் பார்த்துப்பான்; நீங்க
கிருஷ்ணமூர்த்தி கையில கொடுக்கற பணம் என் கையில
கொடுக்கற மாதிரி" என்று ஆசீர்வதித்தார்

ஸ்ரீ மாதா டிரஸ்ட்

SRI MATHA TRUST

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

ஸ்ரீ மாதா டிரஸ்டின் சேவையைக் கண்டு
நெஞ்சம் நெகிழ்ந்த **ஸ்ரீ பெரியவா** அவர்கள்
"**ஜன சேவா ரத்னா**" என்னும் பவித்ரமான உயரிய விருதினை, சென்னை மயிலை பாரதிய வித்யா பவனில் நடைபெற்ற அவரது பிறந்தநாள் விழாவில், நமது நிர்வாக அறங்காவலர் அவர்களுக்கு வழங்கி, ஏழைகளுக்கு உதவும் **ஸ்ரீ மாதா டிரஸ்டின் நற்பணி சூரியன் - சந்திரன் உள்ள வரை நடைபெறும் என்று ஆசீர்வதித்தார்.**



**ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் ஜெயந்தி விழா**வினை சிறப்பிக்கும் வகையில் ஸ்ரீ மடத்தில் அர்ப்பணிப்புடன் பொறுப்பு வகிப்பவர்களுக்கும், ஓய்வு பெற்ற மற்றும் தற்போது பணியாற்றும் ஊழியர்களுக்கும் தரமான மளிகைப் பொருட்களின் தொகுப்பு, வேஷ்டி-சேலை மற்றும் சிறிதளவு நிதியுதவி ஆகியவற்றை **ஸ்ரீ பெரியவா** அவர்களின் பரிபூரண நல்லாசி பெற்றவரும், ஆத்மார்த்த சிஷ்யருமான, ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 5.8.2020 அன்று ஸ்ரீ மடத்தில் வழங்கி மகிழ்ந்தார்.



ஸ்ரீ மாதா டிரஸ்ட்

SRI MATHA TRUST

தனது தர்ம செயல்களின் மூலம்
"**மனிதநேயமே மாசற்ற தொண்டு**" என்று நமக்கு
போதித்த, இந்நூற்றாண்டின் இணையற்ற தவஞானி
ஸ்ரீ பெரியவா அவர்களின் **அதிஷ்டானம்**

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

ஹர ஹர சங்கர...! ஜெய ஜெய சங்கர...!











"One need not be rich or wait to become rich to give his mite" - a Legendary saying

ஸ்ரீ மாதா டிரஸ்ட்

SRI MATHA TRUST

Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.

Account Name : SRI MATHA TRUST

Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20.

Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20.

Tel:044-24420727, 42661687 Mobile: 9500001065 / 9003247857

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113.

Tel: 044-4509 8647 vkrishnamoorthy.smt@gmail.com

www.srimathatrust.org

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 2 பகுதி - 48

இன்று மிக பரவலாகப் பேசப்படும் 'ஸ்ட்ரெஸ்' (Stress) என்பது இன்றைய 8 வயது மாணவர்களிடம் மிக அதிகம். காரணம் அவன் / அவளை சுற்றியிருக்கும் எதிர்மறைஎண்ணங்கள்.

இதே குழந்தை தன்னை அப்படியே ஏற்றுக் கொள்ளும் பெற்றோர்கள் மீது மிகுந்த அன்பும், மதிப்பும் வைத்திருக்கும்.

உங்கள் குழந்தைக்கு 'ஸ்ட்ரெஸ்', தாழ்வு மனப்பாண்மை (Low Self-Esteem) இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள கீழ்க்கண்ட விஷயங்களை கவனியுங்கள்.

- மிக அதிக வேகமும் – கோபமும் ஏற்படுவது.
- தன்னைப் பற்றி மிகவும் குறைவாக நினைப்பது.
- மிக அதிகமான எதிர்பார்ப்பு – தன்னை மட்டுமே கவனிக்க வேண்டும் என்று எண்ணுவது.
- தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வது.
- யாருடனும் பேசாமல் ஒதுங்குவது
- மிருகங்களை துன்புறுத்துவது.
- யாரைப் பார்த்தாலும் பொறாமை கொள்வது.

குழந்தைகளுக்கு நடக்கும் மனரீதியான தாக்குதலை புரிந்து கொண்டு செயல்படுவது மிகவும் கஷ்டம். அதனால் தான் உங்கள் குழந்தையை திட்ட வேண்டும் எனும் நிலை வரும் பொழுது தயக்கம் தேவையில்லை. ஆனால் உபயோகிக்கும் வார்த்தைகளில் கவனம் தேவை.

'நான் திட்டி வளர்க்கவில்லை என்றால் யார் வளர்ப்பார்கள்' என்று நீங்கள் கேட்பது புரிகின்றது. உங்களுக்கு முழு உரிமை உள்ளது என்பதில் மாற்று கருத்துயில்லை. ஆனால் பல சமயங்களில் கோபமும், ஆதங்கமும் ஒரு சேர தாக்கும் பொழுது

என்ன பேசுகிறோம் எனும் கட்டுப்பாடு சிறிதுமின்றி வார்த்தைகளை நெருப்பு போல கொட்டுவது சகஜமாக நடக்கிறது.

உங்களிடம் உங்கள் குழந்தை தனக்கு நடக்கும் உணர்வு தாக்குதலைப் பற்றி கூறினால் பொறுமையாக கேளுங்கள். குழந்தை பேசும் பொழுது நடுவில் குறுக்கிட்டு பேசாதீர்கள். முழுமையாக கேளுங்கள். அவள் / அவனைக் குறைகூறுவதை முதல்கட்டமாகப் பேசாதீர்கள்.

பொதுவாக தன்னைப் புரிந்து கொண்டு வெளிபடுத்தும் பதின் பருவத்தினர் மிக மிக குறைவு. அதனால் அவர்கள் தவறேசெய்திருந்தால் கூட முதல்கட்டப் பேச்சில் கூறவேண்டிய தேவையில்லை.

மகன் – மகள் இவர்களின் வளர்ப்பில் நிச்சயம் வித்தியாசமுள்ளது என்று நமக்கு தெரியும். ஆனால் 'டீன்-ஏஜ்' அதைப் புரிந்து கொள்ளும் தன்மை படைத்ததல்ல.

ஒரு வீட்டில் சாப்பிட்ட எச்சில் தட்டு முதல் வீட்டு வேலை போன்ற பல விஷயங்களில் ஆண் குழந்தை – பெண் குழந்தை இருவரிடத்திலும் பெற்றோர்களுக்கு ஒரே மாதிரியான பார்வை வேண்டும். வெளியுலகை உன்னிப்பாக கவனித்து புரிந்து கொள்ளும் வயது 21க்கு மேல் தான் அதுவரை பெற்றோர்கள் மிகுந்த பொறுப்புடன் பேச வேண்டும்.

பெற்றோர்களுக்கு 'ஸ்ட்ரெஸ்' ஏற்படாமல் இருப்பது மிக மிக முக்கியம். அதுக்கு கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றவும்.

- உங்கள் குழந்தை எப்படியிருக்கிறதோ அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் மனதில் தோன்றும் ஒப்பிடுதல், கோபம், எதிர்பார்ப்பு, ஏமாற்றம் இவற்றைஒதுக்கி வைத்து உங்கள் குழந்தைகளிடம் பேசுங்கள்.
- குழந்தைகளின் கனவுகளுக்கு மதிப்பு கொடுத்து கேளுங்கள். அது தெளிவில்லாமல் இருக்கலாம், மாறிக் கொண்டேயிருக்கலாம். ஆனால் உரிய மரியாதையை ஒவ்வொரு முறையும் அளித்து கேளுங்கள்.

- *உங்கள் தூக்கம், உணவு, உடல் நிலை, மருத்துவ செக்-அப் என்று கவனித்து உங்களை திறனுடன் செயல்பட வைத்துக் கொள்ளுங்கள்.*

**“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்ப தறிவு”** *(குறள்-423; அதிகாரம்– 43)*

*’யார் எதைப் பற்றி கூறினாலும் அவற்றையெல்லாம் கேட்டு அவற்றுள் எது உண்மை என்று கண்டு கொள்ளச் செய்வது தான் அறிவு’ என்கிறார் வள்ளுவர் பெருமான்.* *தொடரும்....*

# பெண்மையை போற்றுவோம்

*நாள் 22.08.2020 சனிக்கிழமை மாலை 6.20 மணிக்கு வேதபாரதி நடத்திய பெண்மையைப் போற்றுவோம் 4வது நிகழ்ச்சி ஆன்லைன் வழியாக துவங்கியது.*

*வேதபாரதி யுவஸ்ரீ சுபஸ்ரீ இறைவணக்கம் பாடி துதித்தார். இதற்கு முன் நடந்த பெண்மையைப் போற்றுவோம் நிகழ்ச்சிகள் குறித்து செல்வி ஹேமலதா கூறினார்கள். சிறப்பு விருந்தினரை வெங்கட்ராமன் வரவேற்றார். கேள்வி – பதில் நிகழ்ச்சியாக செல்வி பூர்வஜா மற்றும் பரிஷ்க்ருதா சிறப்பாக நடத்திக்கொடுத்தார்கள். சுபாஷிதம் – செல்வி மதுரிமாவால் வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர் ஸ்ரீ நடராஜ்* IPS, DGP Retd., *மயிலை* MLA *தனது வழிகாட்டுதலில் பெண்களுக்கு அரசாங்கத்தில் உள்ள பணிகள், வேலை வாய்ப்பு, சமூக வலை தளங்களை பயன்படுத்தும் போது நாம் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை பாதுகாப்பு போன்ற நன்னெறிகளை சிறப்பாக எடுத்துரைத்தார்கள். செல்வி ஹேமலதா நன்றி நவில, செல்வி மதுரிமா வழங்கிய சாந்தி நிலவ வேண்டும் பாடலுடன் நிறைவு பெற்றது.*

*180 குழந்தைகளும் பெற்றோர்களும் பயன் அடைந்தார்கள். நிகழ்ச்சிக்கு உதவி செய்த ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர மாமா தன்னார்வலர் ஸ்ரீ ராதா கிருஷ்ணன் ஆகியோருக்கு வேதபாரதி நன்றியினை உரித்தாக்குகிறோம்.*

*என்றும் அன்புடன்,*

*ஆசிரியர்.*

# "பாரத தேசப் புனித யாத்ரை"

திருச்சி **K.கணேசன்**

*'அத்யாயம் - 4'*

# காசி என்கிற வாரணாசி

*12.04.2015 ஞாயிறு மதியம் ப்ரயாகையிலிருந்து நாங்கள் காரில் என் நண்பரின் மாமா, மாமியுடன் கிளம்பி மாலை காசி அனுமான் காட் வந்து சேர்ந்தோம். முதலில் காசியில் கால பைரவர் சன்னதியில் அவரிடம் எங்களின் காசி & கயா யாத்திரை நன்கு நிறைவேறவும், காசியில் நாங்கள் தங்கியிருந்து ஸ்ராத்தம் முதலிய பித்ரு காரியங்களை நல்ல படியாக நடத்தி முடிக்கவும், அங்குள்ள ஆலயங்களை நன்கு தரிசிக்கவும், அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து விட்டு, பின்னர் சாஸ்த்ரிகள் ஏற்பாடு செய்திருந்த அனுமான் காட் என்ற இடத்தில் (அவர் வீட்டிற்கு எதிரில்) தங்கினோம்.*

*13.04.2015 திங்கள் காலை 5.00 மணிக்கு எழுந்து குளித்து ப்ராதஸ் ஸந்த்யாவந்தனம் செய்து விட்டு ரெடியாக இருந்தோம். (கங்கா போன்றபுண்ணிய நதிகளில் குளிப்பதற்கு முன், நாம் தங்கி உள்ள இடத்திலேயே முதலில் குளித்து நம்மை சுத்தம் செய்து கொண்டு பிறகு தான் நதிகளில் தீர்த்த ஸ்நானம் செய்ய வேண்டும் என்பது சாஸ்த்ரம்) பின் 6.30 மணிக்கு சாஸ்த்ரிகள் வீட்டு மாடியில், கங்கையில் எங்களுடைய ஸ்நான சங்கல்பம், காசி & கயா யாத்ரை மற்றும் ஸ்ராத்தம் முதலியவை விக்னம் இல்லாமல் நடப்பதற்காக மிகவும் சிறப்பான முறையில் மஹா சங்கல்பம், கணபதி பூஜை, வருண பூஜை போன்றவற்றை கிட்டத்தட்ட ஒரு மணி நேரம், 18 சாஸ்திரிகள் துணையுடன் வேத மந்திரங்கள் முழங்க ப்ரதான சாஸ்த்ரி அவர்கள் செய்வித்தார். பின்னர் 19 சாஸ்த்ரிகளுக்கும் தக்ஷிணை கொடுத்து "நாந்தீசோபன ப்ரீயதாம்" என்று சொல்லி நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெற்றோம். பிறகு காலை 8.00 மணிக்கு நாங்கள் இருவரும் மற்றும் வேறு நான்கு யாத்ரிகளும் சேர்ந்து ஆறு பேரும் மோட்டார் போட்டில் மணிகர்ணிகா காட் ஸ்நானத்திற்குச் செல்வதற்காக, போட்காரன் எங்கள் இடத்திற்கு வந்து அவனுடன் கங்கை கரைக்கு எங்களை அழைத்துச் சென்றான். மோட்டார் போட்டில் செல்லும் போது*

4/5 மனித உடல்கள் ஹரிச்சந்த்ரா காட் கரையில் எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தோம். அங்கு விறகு கட்டைகள், உடலை எரிப்பதற்காக, மலைபோல் குவிந்து கிடந்தன. வேறு மனித சரீரம் வந்தவுடன், பாதி எரிந்த உடலை அப்படியே கங்கை நதி ப்ரவாகத்தில் இழுத்து விடுகின்றனர். ஆனாலும் கங்கை நீர் எந்த விதமான நாற்றமும் அடிப்பது இல்லை. இது ஆச்சர்யமான விஷயம். எரிந்தும், எரியாமலும் பிணத்தை கங்கையில் தள்ளுவதை மத்திய அரசு கடுமையான நடவடிக்கைகளால் தடுத்துவிட்டார்கள். அஸ்தி மட்டுமே கங்கையில் கரைக்கப்படுகிறது. 10 நிமிட போட் பயணத்திற்கு பிறகு ஆதி புஷ்கரணி - மணிகர்ணிகா குண்ட் என்ற சதுர, பச்சை கலர் நீர் (பாசி படிந்ததால்) உள்ள குளத்தை அடைந்தோம். 25 படிகள் செங்குத்தாக இறங்கி பாசி வழுக்கிய குளத்தில் குளித்தோம். இந்த மணிகர்ணிகா குண்டில், உச்சிப் பொழுதில் ப்ரம்மா, விஷ்ணு & சிவன் தங்களது பத்னிகளுடன், தினமும் வந்து தீர்த்தம் ஆடுவதாக ஐதீகம்.

அதன் பின்னர் மணிகர்ணிகா காட் என்ற இடத்தில் கங்கை ப்ரவாகமாக ஓடும் இடத்தில் இரும்பு கம்பியை (பாதுகாப்புக்காக கட்டி வைத்து உள்ளனர்) பிடித்துக் கொண்டு 12 முறை நன்கு மூழ்கி குளித்தோம். இங்கு வயதானதால் மற்றும் இதர காரணங்களால் தங்களால் வர இயலாதவர்களை, நம் சொந்த / பந்தங்களை மனதில் நினைத்து, நாம் 3 முறை முங்கிக் குளித்தாலே அவர்களும் கங்கையில் வந்து குளித்த புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. பிறகு மீண்டும் மோட்டார் போட்டில் ஏறி நாங்கள் தங்கியுள்ள இடம் வந்து அன்று வேறு சடங்குகள் இல்லாததால் முழு ஓய்வு எடுக்குமாறு சாஸ்த்ரிகள் கூறினார். போட்டிற்கு 80 / மற்றும் சதுர பாசி படிந்த குளத்தில் குளிக்க ரூ.10-ம் ஒவ்வொருவரும் கொடுத்தோம் காட் என்பதற்கு படித்துறை என்று பொருள். கங்கையில் மொத்தம் 64 காட் உள்ளது. வருணா முதல் அசி வரை, இதனால் தான் கங்கைக்கு “வாரணாசி” என்று பெயர்.

மாலை ஆட்டோவில் வியாச காசி மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் சென்றோம். காசி ராஜா பேலஸ் நுழைவுக் கட்டணம் தலைக்கு ரூ.20/- முதலில் நேராக வியாச காசியின்

உள்ளே உள்ள இராமலிங்கேஸ்வரர் ஆலயம், பிறகு 10 படி ஏறி மூன்று சிவலிங்கங்களை தாமிரத்தால் கவசம் போல் கவர் செய்திருந்தார்கள். காசி விஸ்வநாதலிங்கம், வியாசலிங்கம், சுகம்பிரம ரிஷி லிங்கம் (வியாசர் மகன்) இங்கு நாம் வேண்டிக் கொண்டால், நம் கோபம் குறையுமாம். எனக்கு கோபம் அதிகம் வரும், எனவே நாங்கள் என் கோபம் குறைய வேண்டிக் கொண்டோம். (5 வருடம் ஆகியும் இன்று வரை என் கோபம் குறையவேயில்லை என்பது வேறு கதை). பிறகு BHU-வில் உள்ள பெரிய பிர்லா மந்திர் சென்றோம்.

வியாசர், காசியில் கோபப்பட்டதால் சிவன் அவரை காசியில் தங்கவிடாமல் சற்று தள்ளி வியாச காசியில் தங்கச் சொன்னார் எனவே காசியில் கோபப் படக்கூடாது.

தொடரும்.......

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

**திருமதி. தனலட்சுமி** **9444140119** | **திருமதி. ராஜலட்சுமி** **7092199447**

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ பாலசுப்பிரமணியன்** **9442094380** **ஸ்ரீ நடராஜன்** **9443103404**

**G. SIVAGAMASUNDARI**
**99940 89133**



**N. GURUMURTHY**
**99940 89140**

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# இந்தியப் பொருளாதார உயர்வு பெண்களின் கைகளில்தான் இருக்கிறது

*(இதே தலைப்பில், 2009-ம் ஆண்டு அமுதசுரபி செப்டம்பர் மாத இதழில் எழுதி இருந்தேன். நாம் வாங்கவேண்டிய சுதேசி பொருட்களின் பட்டியலையும் இடம்பெறச் செய்திருந்தேன். அதற்கு அடுத்த மாத இதழில், வாசகர் கடிதங்கள் பகுதியில் உளுந்தூர்பேட்டை சாந்தி முத்து குமாரசுவாமி என்றபள்ளிக்கூட ஆசிரியர், தன் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் அந்தக் கட்டுரையைப் பல பிரதிகள் எடுத்து விநியோகித்து அவர்களது பெற்றோர்களிடம் கொடுத்துவிடும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார் என்கிறஅவருடைய கடிதத்தை வெளியிட்டிருந்தார்கள். இவ்வாறு ஓரிரிருவது மனங்களாவது மாற்றம் அடைந்தால் வெற்றியே)*

*அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்த காலக்கட்டத்தில் உலகெங்கிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. குறிப்பாக உலகின் பெரியண்ணன் என்று சொல்லப்படுகின்றஅமெரிக்கா, பொருளாதார ரீதியில் அபாயகரமான நிலையில் இருந்தது. நமது பாரத தேசம் மட்டுமே. நாளைக்கு இருக்கட்டும் என்று சேமித்துவைக்கும் நமது அடிப்படை குணத்தினால் காப்பற்றப்பட்டோம்.*

*இப்போது 2020 ம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே உலகளாவிய அளவில் "கொரோனா" என்கிறநோய் பயத்தில் மக்கள் செயலிழந்து, நாடுகளின் பொருளாதாரம் நலிவடைந்து கிடக்கிறது. இந்தக் காலகட்டத்திலும் குடும்பத்தையும் இந்த பாரத தேசத்தையும் நம்மால் முடிந்தவரை பாதுகாக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த பொறுப்பு பெண்கள் கைகளில்தான் இருக்கிறது. ஆரோக்கியமான சமையலும் செய்ய வேண்டும். அக்கறையான சேமிப்பும் செய்ய வேண்டும். அதற்காக அரைவயிற்றுக்கு சாப்பிட வேண்டும் என்றோ, வருவாய் அத்தனையும் சேமித்து விடவேண்டும் என்றோ நான் சொல்லப்போவதில்லை. பெண்களின் கவனம் முழுவதும், குடும்பத்திற்காக நீங்கள் வாங்கும் உப்பிலிருந்து உயரிய ஆடை ஆபரணங்கள் வரை*

*இருக்க வேண்டும். பெரும்பாலான வீடுகளில் பெண்கள்தான் பொருட்களை வாங்குகிறார்கள். அவ்வாறு வாங்கும் பொருட்கள் அவசியமானதா? இந்திய உற்பத்திப் பொருளா? என்பதை கண்டிப்பாக கவனிக்க வேண்டும். ஏன்? நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும், இந்த தேசத்தின் வளர்ச்சிக்காகவும், பாதுகாப்பிற்காகவுமே இருக்க வேண்டும். இது எவ்வளவு சுலபம் என்று இந்தக் கட்டுரை மூலம் அறிந்து கொள்ளப் போகிறீர்கள்.*

*ஆனால் அதற்கு முன்னால் உங்கள் மனதில்,* **நான் இனி இந்தியப் பொருட்களையே வாங்குவேன், ஆடம்பரம் தவிர்ப்பேன், என் குடும்பத்தினரின் ஒவ்வொரு ரூபாயையும் இந்த தேசத்தின் உற்பத்திக்கும் பாதுகாப்பிற்கும் மட்டுமே போய் சேரும்படி கவனத்தில் கொள்வேன். என்கிறதீவிரமான லட்சியத்தை சங்கல்பமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.** *செய்வீர்கள் தானே (இதனால் கிடைக்கப்போகும் மன நிறைவை என்னோடு பகிர்ந்து கொள்ளுங்கள்) முதல் படியாக, நம்மிடையே இருந்து கொண்டிருக்கும் ஒரு மாபெரும் தவறான எண்ணம் என்ன என்பதைப் புரிந்து கொண்டு அதனை வேரோடு அழித்து விட வேண்டும். அது என்ன?*

*நான் ஒருத்தி இதைச் செய்வதால் இந்த தேசத்தின் குறைகளும் சீர்கேடுகளும் மாறிவிடப் போகிறதா என்ன? இதெல்லாம் நடக்கறகாரியம் இல்லை" என்று மனதில் தோன்றும் நல்ல மாற்றங்களைத், தாங்களாகவே அலட்சியம் செய்துவிட்டு, செய்து கொண்டிருக்கும் தவற்றைநியாயப் படுத்திக்கொண்டு தொடர்வதுதான் அந்த மாபெரும் தவறு. கண்ணுக்குத் தெரியாத இதன் விளைவு என்ன தெரியுமா? உங்கள் குடும்பத்தினரின் கடும் உழைப்பில் கிடைக்கும் சம்பளத்தில் 60 – 70 சதவீகிதத்தை நீங்கள் வாங்கிக் குவிக்கும் அந்நிய தயாரிப்புப் பொருட்களின் மூலம் ஏதோ ஒரு அந்நிய தேசத்திற்குத் தாரைவார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது தான்.*

*(இந்த லாபங்கள் அவர்களால் நம் நாட்டுக்கு எதிராகவே எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றன என்கிறவிஷயங்கள் மிகப் பெரிய தலைப்பு. இங்கே விவரிக்க இயலாது)*

*குடும்ப அளவிலோ அல்லது தேச அளவிலோ இந்தியப்*

பொருளாதாரத்தின் உயர்வு பெண்களின் கைகளில்தான் இருக்கிறது, என்பதை நான் (பிரதமர் மோடிஜி) புரிந்து கொண்டுள்ளேன், நீங்களும் புரிந்து கொள்ளுங்கள் என்று நமக்கு சூசகமாக உணர்த்துவதற்காகவோ என்னவோ நமது பிரதமர், திரு.நரேந்திர மோடி அவர்கள், மதிப்பிற்குரிய பெண்மணியான **திருமதி.நிர்மலா சீதாராமன்** அவர்களைத்தானே. இந்த மாபெரும் தேசத்தின் நிதியமைச்சராக நியமனம் செய்துள்ளார். அவ்வாறே, ஒவ்வொரு இந்தியப் பெண்ணுக்குள்ளும் ஒரு ஜான்சி ராணி, வேலு நாச்சியார் போன்றவர்களின் அளவற்ற வீர சக்தி புதைந்திருக்கிறது என்று நமக்கு உணர்த்தவே திருமதி.நிர்மலா சீதாராமன் அவர்களை இந்த தேசத்தின் பாதுகாப்பு அமைச்சராகவும் பொறுப்பேற்க வைத்திருந்தார்! தேசத்தின் மிக முக்கியமான பொறுப்புக்களை ஒரு பெண்ணின் கையில் ஒப்படைத்திருப்பதை யோசிக்காமலா செய்திருப்பார்?

பெண்களே, உங்களை நீங்களே குறைவாக மதிப்பிட்டுக் கொண்டு விடாதீர்கள். உங்களுக்குள் உறைந்தும் உறங்கியும் கிடக்கும் அபார சக்தியை உணரத் துவங்குங்கள். ஒவ்வொரு பொருளை வாங்கும் போதும் அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் அந்நிதய தேசத்தின் ரகசியங்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். எவ்வாறு இது சாத்தியம் என்பதனை தொடர்ந்து விவரிக்க உள்ளேன். இதனால் மிச்சப்படும் தொகையிலிருந்து ஒரு சிறு பகுதியை இந்திய தேசத்தின் ராணுவத்திற்கு அனுப்பிவைத்து, மன நிறைவடையுங்கள். சுதேசி பொருட்களை மட்டுமே வாங்குவதினால் உங்கள் குடும்பத்திற்கு சேமிப்பு மட்டுமல்லாமல். இந்த தேசத்தின் பொருளாதார உயர்வுக்கும் தேச பாதுகாப்பிற்கும் உடல் நோகாமல், ரத்தம் சிந்தாமல் பேருதவி செய்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

சென்றஇதழில் இந்திய ராணுவத்திற்கு எவ்வாறு உதவவேண்டும் என்று வழிமுறைகளைச் சொல்லியிருந்தேன் சிறந்த வரவேற்பு என்று ஆசிரியர் தெரியப்படுத்தினார். என் மனமார்ந்த நன்றிகள். ஒரு சிலராவது சிறு தொகையாவது அனுப்பிவைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இனி இந்த தேசத்தின் பொருளாதார உயர்வுக்கு நீங்கள் எப்படி உதவலாம் என்று பார்ப்போம். தொடரும்...

**- டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன்.**

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.14. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

அப்படியல்ல. ஒரு தகுந்த மருத்துவரை அணுகவும். நோயாளிகளின் வலிகளைக் குறைப்பதில் மருத்துவரின் முயற்சிகள் வெற்றி பெறவும், நோயாளிக்கு கடவுளின் கருணை தேவைப்படுகிறது. இதைப் பற்றி பகுதி 1.5இல் நாம் ஏற்கனவே விவாதித்துள்ளோம். ஈஸ்வர கடாக்ஷம் கிடைப்பது, புண்யகர்மாவினால்.

தந்தையின் விந்து மூலமாக ஒருவனுள் புகுகின்ற மூன்று விருத்திகளின் வெளிப்பாடே, ஒருவரின் இயல்புகளாகவும் அம்சங்களாகவும் அமைகின்றன என்று சாஸ்திரம் செப்புகிறது. அதை மரபணு நியதி என்கிறது நவீன விஞ்ஞானம். எனவே, விருத்திகள் என்பவை மரபணு நியதியின் இயல்பு காட்டி (information content) என்று சொல்லுவதும் ஜீவன் அதன் சூத்திரதாரி என்று சொல்லுவதும் நியாயமாகத்தான் படுகிறது. ஒரு விஞ்ஞானி, அதை மிக ஸ்வாரஸ்யமாகக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார். DNA என்பது உயிர் வாழ்க்கையின் மர்மம் அல்ல. உயிர்தான் DNA-யின் இரகசியம் Nature (1964) VOL 2002 பக்கம் 960). ஒரு சக்திக்குப் பின்னால் இருக்கும் இரகசியம் தேவையாக இருப்பது போல DNA க்குப் பின்னால் இருக்கும் பரம இரகசியம் ஜீவனின் கர்மா. சக்தி அழிவதில்லை என்பதுபோல, மரபு பற்றிய செய்திகளும் அழிவதில்லை என்றுதான் விஞ்ஞானம் விளம்புகிறது. எனவே DNAஇன் இயல்புகாட்டி திடீரென்று ஆகாயத்திலிருந்து குதித்திருக்க முடியாது. எனவே, விருத்திகளின் இயல்புகாட்டி திடீரென்று ஆகாயத்திலிருந்து குதித்திருக்க முடியாது. எனவே, விருத்திகளின் இயல்புகளின் சக்தியே, DNA உருவாவதற்குக் காரணம் என்று கொள்ளப்பட வேண்டும்.

20. "சிராத்தத்தின் முக்கியத்துவம் என்ன? இந்த உலகை விட்டுப் பிரிந்த ஜீவனுக்குச் செய்யப்படும் நிவேதனங்கள் ஜீவனை எப்படி அடையும்?

....தொடரும்

# செல்வ செழிப்பும் இழப்பும்

*லக்ஷ்மி கடாக்ஷம் நமக்குக் கிடைக்கும் போது மனிதர்கள், மலர்களைச் சுற்றும் தேனீக்கள் போல் நம்மை சுற்றிச்சுற்றி வருவார்கள். முன்பின் தெரியாதவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று நம்மை "பாசமழை" யால் குளிர்விப்பார்கள் அவர்களின் செயற்கைத்தனமான முகஸ்துதியில் நாமும் சற்று மயங்கித்தான் போவோம். திடீரென்று கிடைக்கப் பெற்ற செல்வ செழிப்பின் காரணமாக நமது கர்வமும் சற்று மேலோங்கி, ஆந்தையைப் போல் கண்கள் குருடாகிப் போவோம். லக்ஷ்மியின் வாகனமும் ஆந்தை தானே, லக்ஷ்மி வரும் போது ஆந்தையின் வாகனமும் கூடவே வரத்தானே செய்யும்!.*

*செல்வம் சேர சேர, நாம் வாழ்க்கையின் யதார்த்தங்களைக் காண்பதற்குத் தவறிவிடுகிறோம். நம் அறிவாற்றல் பறிக்கப்பட்டுவிடுகிறது. நல்லது, கெட்டது பாகுபாடு தெரியாமல் மதியிழந்து, சுயகர்வம் அதிகமாகி விடுகிறது. லக்ஷ்மி நம்மைவிட்டு விலகியதும் செய்வதறியாது விரக்தியடைந்து விடுகிறோம். பெரும்பாலும் கிடைக்கப்பெற்றசெல்வத்தை தவறான வழிகளில் தொலைத்து விடுகிறோம். செல்வத்தின் அருமையும் பெருமையும் வெகு சிலராலேயே சரியாகப் புரிந்துகொள்ள முடிகிறது. செல்வத்தினால் அடைந்த அகங்காரத்தால் நடுவீதிக்கு வந்தவர்கள் பலர். சமீபத்திய உதாரணமாக திரு.விஜயபத் சிங்கானியாவைச் சொல்லலாம். வாழ்க்கையின் அர்த்தத்தை அவரிடமிருந்து புரிந்து கொள்ளலாம்.*

*மதிப்பிற்குரிய ரத்தன் டாட்டா அவர்கள் ஒரு முறை, தனது டாட்டா மோட்டார்ஸ் நிறுவனத்தை தனது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக, ஃபோர்டு கம்பெனிக்கு விற்க விரும்பினார். ஆனால் அகங்காரம் கொண்டிருந்த ஃபோர்டு கம்பெனி, டாட்டா நிறுவனத்தின் அருமை பெருமை தெரியாமல், அடிமாட்டு விலைக்கு கேட்டது ரத்தன் டாட்டா, தனது நிறுவனத்தை விற்காமல் அமைதியாகப் பின்வாங்கினார். சில ஆண்டுகளுக்கு பிறகு, ஃபோர்டு கம்பெனி தன்*

சொத்துக்களை விற்க வேண்டிய சூழ்நிலை வந்தது. இந்த முறை, ரத்தன் டாட்டா அவர்கள், ஒருவார்த்தை பேசாமல், அவர்களின் புகழ்பெற்ற மாடல்களை விலைக்கு வாங்கி, அந்த நிறுவனம் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு வழிவகுத்தார். ரத்தன் டாட்டா அவர்களின் இந்த குணம் நமக்கு உணர்த்துவது என்னவென்றால், கடுமையான காலங்களில் மனம் தளராமையும் வளமான காலங்களில் அகங்காரம் இன்மையும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத்தான்.

பழைய காலங்களில் மிகையான செல்வங்களை ரகசியமான இடத்தில் பாதுகாப்பாய் வைத்திருப்பது வழக்கம். இதனால் ஒருவரது நிதிநிலைமை இன்னொருவருக்குத் தெரியாமல் இருக்கும். ஒருவர் செல்வத்தை இழப்பதும் மீண்டும் பெறுவதும் நிரந்தரமானதல்ல. நல்ல காலமும் கெட்ட காலமும் எப்போதும் மாறிக்கொண்டே இருக்க கூடியவை. எவ்வாறாயினும் நமது மனம் எப்போதும் நடுநிலையுடன் நேர்வழிப்பாதையில் நம்மை செலுத்துவதாகவே இருக்க வேண்டும்.

**குஜராத் மொழியில் அமிதாப் தோஷி**

**தமிழாக்கம் : டாக்டர் ஷ்யாமா**

**பாரில் எல்லா தேசங்களில்**
**எங்கள் தேசம் உயர் தேசம்**

**பாரதப் பிரதமரின் 70ம் ஆண்டு**
**பிறந்த நாள் வாழ்த்துக்கள்.**

*17.09.2020 பாரதத்தின் பெருமைதனை உலகத்திற்கு எடுத்துச் சொல்ல வந்த தவப்புதல்வன்* **மோடிஜி** *அவர்கள் பலநூறு ஆண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து பெருமை பெற வேதபாரதி மனதார வாழ்த்துகிறது.*

# புரோஹிதர்

-ஆதிரையன்

## ஆணி வேர்

*சென்ற மாத தொடர்ச்சி....*

*பெரிய கோவில்களில் இருக்கும் அர்ச்சகர்களிடையே, வேதம் படித்த பண்டிட்களிடையே, மெத்தப்படித்து பெரிய உத்தியோகங்களில் இருக்கும் பிராமணர்களிடையே ஒரு இடைவெளியை கடைபிடித்து பழகும் அதே மக்கள், புரோகிதர்களிடம் மிக நெருக்கமாக மனதளவில் வாழ்கிறார்கள். காரணம்... மற்றவர்களை தேடி மக்கள் செல்கிறார்கள், ஆனால் மக்களைத் தேடி அதாவது, அவர்களது கிராமங்களை இல்லங்களைத் தேடி புரோகிதர்கள் செல்கிறார்கள்.*

*மூதாதையர்களுக்கு கர்மா செய்வித்தல், அதன் நன்மைகளை விளக்கி கூறுதல் போன்ற இவர்களது செயல்பாடுகளின் காரணமாகத்தான் இன்றளவிலும் “மகாளய அமாவாசை”, “மாசி மகம்”, ஆடி அமாவாசை போன்ற பித்ருக்களுக்கான நாட்களில் புனித நதிகளிலும், புனித தீர்த்தங்களிலும், புனித க்ஷேத்ரங்களிலும் பெருமளவில் மக்கள் கூடி அவரவர்களின் மூதாதையர்களுக்கு தர்ப்பணம் செய்து பலனடைகின்றனர்.*

*இறை மறுப்பு கொள்கைகளில் இருப்பவர்களும், பிராமண எதிர்ப்பு கொள்கையில் இருப்பவர்களும் கூட இந்த விசேஷ நாட்களில் அவர்களின் மூதாதையர்களுக்கு தர்ப்பணம் செய்கிறார்கள். அவர்களின் பிறப்பு முதல் இன்றைய அரசியல் வளர்ச்சி வரையில் முழுக்க அறிந்தவர்கள் புரோகிதர்கள், என்பது குறிப்பிடத்தக்கது.*

*இன்றைக்கு, சமுதாயத்தில் பெரும் சவாலாக இருப்பது மதமாற்றம். இந்த மதமாற்றம், பரம்பரையாக புரோகிதர்கள் தொடர்ந்து செயல்படும் கிராமங்களில் பெரும்பாலும் இல்லை. அதே போன்று மதமாற்றம் அதிகம் நடைபெறும், நடைபெற்ற பகுதிகளில் பரம்பரை புரோகிதர்கள் இல்லை.*

*சனாதன தர்மத்தின் ஆணிவேர் கிராமப்புறங்களில் வலுவிழக்காமல் இருப்பதற்கு இவர்களது பணியே முக்கிய*

காரணம். குடத்திலிட்ட விளக்குபோல, எந்தவிதமான விளம்பரமும் இல்லாமல் “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற வரிகளுக்கு சொந்தக்காரர்களாக திகழ்கிறார்கள்.

சனாதன தர்ம ஆணிவேரின் மரமும், கிளைகளும் பசுமையாகவும், வளமையாகவும் கிராமங்கள் தோறும் பராமரித்து வரும் புரோகிதர்களை கிராமங்களும், கிராம மக்களும் தங்களோடு ஒருவராக ஏற்றுக் கொண்டு போற்றி வருகிறார்கள்.

நமது சனாதன தர்மத்தில் முக்கியமானது மூதாதயர்களுக்கு செய்யும் கடன், தொடர்ந்து இந்த நர ‘‘ஜென்மத்தை கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுதல் இப்படியாக ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில் பயணத்தை சரியான பாதையில் செலுத்தும் போது, அதுவே, நெறி சார்ந்த சமுதாயம் அமைவதற்கு அடித்தளமாக இருக்கிறது.

கிராமப்புறங்களிலும், சில நகரங்களிலும் மக்கள் எந்த கவலையுமின்றி அவர்களது அன்றாட பணியை செய்து வருகிறார்கள் எனில், அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை புரோகிதர்கள் தவறாது செய்து வருவதே!

அவரவர் இல்லங்களில் வரும் திதிகள், அமாவாசை விரதம், பௌர்ணமி விரதம் என முன்கூட்டியே மக்கள் அறிய செய்துவிடுகிறார்கள். இப்படியாக நமது சனாதன தர்மத்தின் ஆணி வேரை காக்கும் பணியில் புரோகிதர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இதன் தாக்கத்தினால் கிராம மக்கள் பிராமணர்களின் பெருமைகளை போற்றுகின்றனர். சமீப காலங்கள் போன்று கிராமங்களில் முன்பெல்லாம் திருமண நிச்சயதார்த்தத்திற்கு புரோகிதர் வைத்து செய்வது வழக்கமில்லை. ஒருசில உயர் வகுப்பை சார்ந்தவர்கள் மட்டுமே செய்வார்கள். ஆனால், தற்போது அனைத்து தரப்பினரும் விரிவாக புரோகிதரின் வழிகாட்டலில் நடத்துவது வரவேற்கத்தக்கது.

தீபாவளி நோன்பு என்னும் கேதார கௌரி விரதம், வரலட்சுமி விரதம், காரடையான் நோன்பு போன்ற அனைத்து பூஜைகளுக்கும் புரோகிதர்களின் தேவை கூடி வருகிறதென்றால்,

“புரோகிதரின் வழிகாட்டலினால் செயல்படும் கிராமங்களே முன்னுதாரணம்.

இன்றைக்கு சென்னை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் சாதாரண கூலித் தொழிலாளி வீட்டு விசேஷங்கள் புரோகிதர் வைத்து செய்யப்படுவதற்கு காரணம் பெரும்பாலான இன்றைய மாநகர வாசிகள் கிராமப்புறங்களிலிருந்து புலம் பெயர்ந்தவர்களே.

தான் தனது கிராமத்தில் அனுபவித்த இந்த சடங்குகளை மாநகரப் பகுதிக்கு வந்தும் தொடர்கிறார்கள். இங்கிருந்துதான் தொடங்குகிறது சனாதன தர்மத்தின் ஆணிவேர்.

தொடரும்....

# “நற்பணி தொடரட்டும்”

எல்லோர் வீடுகளிலும் ஸ்ரீ கணேஸ சதுர்த்தி நன்றாக நடந்திருக்கும் மிக்க சந்தோஷம். உங்கள் பேராதரவோடு வேதபாரதி செய்திகள் 7-ம் ஆண்டு நோக்கி வெற்றி நடை போடுகிறது. வேதபாரதி செய்திகள் ஆரம்ப காலம் முதல் கடந்து வந்த பாதை மிருதுவானது அல்ல. பல இடையூறுகளைக் கடந்து, ஆச்சார்யார்களின் அனுக்ரஹத்தோடு நமக்கு இன்று வரை எல்லோர் ஆதரவோடும் நடந்து வருகிறது.

ஆரம்பம் முதல் பத்திரிகையில் நல்ல கருத்துக்கள் வழங்கி வரும் கட்டுரையாளர்கள் ஸ்ரீ சூர்ய நாராயணன் மாமா, ஸ்ரீமதி காந்தலெட்சுமி சந்ரமௌலி, டாக்டர் ஷ்யாமா ஆகியோரின் பங்களிப்பு அளப்பரியது.

ஆரம்பம் முதல் புத்தகம் வெளிவர உதவிய கட்டுரையாளர்கள், விளம்பரதாரர்கள், சந்தாதாரர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

அக்டோபர் மாதம் முதல் புதிய படைப்புகளுடன் 7-ம் ஆண்டில் அடி எடுத்து வைப்போம்.

ஆசிரியர்.

# வேதபாரதி - ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதி யஜுர் மற்றும் ரிக் வேத உபாகர்மா நிகழ்வு

*ஸ்ரீ பகவத் க்ருபையாலும் மஹான்கள் ஆசியாலும் வழக்கம்போல் 03.08.2020 அன்று "யஜுர் வேத" உபாகர்மாவும், 04.08.2020 அன்று "ரிக்வேத" உபாகர்மாவும் (ஆவணி அவிட்டம்) மேற்படி பகுதியில் ஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது.*

*தற்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு சமூக இடைவெளி மற்றும் தடுப்பு முறைகளை கையாண்டு சுமார் 70 பிராமணர்கள் (குழந்தைகள் மற்றும் கிருஹஸ்த்தர்கள்) 3* Batch *ஆக பிரிக்கப்பட்டு உபாகர்மா நடைபெற்றது.*






*ஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள், வேதபாரதி இப்பகுதி செயல் ஆர்வலர்கள் திரு.சந்திரசேரன் மற்றும் திரு.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இணைந்து உபாகர்மா ஹோமத்துடன் மிகச்சிறப்பாக ஆவணி அவிட்டத்தை நடத்தினார்கள்.*

*ப்ரும்மச்சாரி குழந்தைகளுக்கு திரு.வெங்கடேஷ் சந்திரசேகர் அவர்கள் ஸமிதாதான மந்திரம் ஜெபித்து செய்வித்தார்கள்.*

*மேற்படி வைபவத்தில் ''வேத உபாகர்மா'' வின் சிறப்பையும் பூணல் போடும் வைபவம் முடித்த நாம் அனைவரும் நாள் தோறும் கடைபிடிக்க வேண்டிய அனுஷ்டானங்களையும் காயத்ரி மந்திரத்தின் சிறப்பையும் மன்னை இரா.நாராயண சுவாமி அவர்கள் விளக்கினார்கள்.*

*தேனீர் உபசரிப்புடன் "உபாகர்மா" வைபவங்கள் நிறைவு பெற்றது.*

# புதுச்சேரி வேதபாரதி

*புதுச்சேரி வேதபாரதி குழு சார்பில் ஆகஸ்ட் 15, 16 - புதுவையில்* Zoom *வழியாக* Matrimonial *நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது. கலந்து கொண்ட குடும்பத்தார்களின் அனுபவஙகள் :*

1. My sincere thanks to VB Matrimony team of Balu Sir, Ramesh Sir, Sekar Sir, Pattabi Sir,Natrajan Sir ,Venkataraman Mama Muralidharan Sir and Neela Mami for conducting this Zoom meeting on 15 & 16.of August 2020.. We really enjoyed full sessions on both the days...I have no words to express my gratitude for the way the meet was conducted . We wish the team all the best and all success in your future endeavours...Hope and pray the marriage of my son V.Balaviswanathan (1059) gets fixed at the earliest and also wish all the participating brides and grooms to find a suitable match of their choice. Thanking you once again.

With regards from

**B.Vaidyanathan,** Kamban Nagar,

Reddiyarpalayam, Pondicherry 10.

---

2. Namaskaram Mama I am Saraswathi m/o Venkatramani (1194) The zoom meeting held on past two days was so helpful for us. We as brahmin have only few opportunities to meet our people personally. This zoom meet help me very much in search of daughter in law. Thank you so much for the support and steps taken by the team, praying God for good things happen to all families.

---

3. *மாமா நமஸ்காரம், உங்கள் இரண்டு நாட்கள் புரோக்ராம் மிக நன்றாக இருந்தது. வேத பாரதி அன்பர்களுக்கு வாழ்த்துக்கள்.*

VVBA 1960 **K.Sankar,**

Regds. **Kameswaran.G**

---

4. Patabi sir, Excellent work by the entire team of Veda Bharati. Please send us a References of boys horoscope.

Regards & thanks

**Ramaswamy R** No.9049, AKHILASREE

STAR Health Insurance
Personal and Caring

India's First Stand Alone Health Insurance Company

**உங்கள் மருத்துவம்! எங்கள் செலவில்!!**

உங்கள் உழைப்பும், அதனால் உருவாகிய சேமிப்பும் உங்கள் குடும்பத்திற்கு அவசியம் தேவை.

*அவசர காலத்தில் மருத்துவ செலவிற்கு என்ன செய்வீர்கள்?*

- நகை அடமானம் வைப்பீர்களா?
- பிக்செட் டெபாசிட்டை உடைப்பீர்களா?
- நண்பர் மற்றும் உறவினரிடத்தில் கடன் வாங்குவீர்களா?
- சிகிச்சை மற்றும் மருத்துவமனையின் தரத்தை குறைத்துக்கொள்வீர்களா?
- ஓர் அதிசயம் நடப்பதற்காக இறைவனிடத்தில் வேண்டுவீர்களா?

✓ *முன்னெச்சரிக்கையாக மருத்துவ காப்பீடுகளை எடுத்துக்கொள்ளுங்கள்*

இன்றைய சூழலில் மருத்துவச் செலவு வரும் முன் மருத்துவ காப்பீடு மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து "மருத்துவக்காப்பீடு திட்டத்தில் இன்றே இணையுங்கள்"

*மேலும் எமது சிறப்பு சேவைகள் :-*

குடும்பம் மற்றும் தனிநபர் காப்பீடு, மூத்த குடிமக்கள் காப்பீடு, சர்க்கரை நோயாளிகள் காப்பீடு, இருதய நோயாளிகள் காப்பீடு, புற்று நோய் காப்பீடு, விபத்து காப்பீடு திட்டத்தில் இணைந்து பயன்பெறுங்கள்.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

STAR
Personal and Caring

The Health Insurance Specialist

**GAYATHRI**

**Cell: 936 027 7372**

## வாசகர் கடிதம் :

*1. அன்புள்ள ஆசிரியருக்கு,*

*வேதபாரதி ஆகஸ்ட் இதழ் ஸ்ரீ வாரியார் சுவாமிகளின் வசீகரமான புன்னகையுடன் மனதைக் கவரும் வண்ணம் அமைந்தது. பல வருடங்கள் ஏதாவது ஒரு வகையில் இந்திய ராணுவ வீரர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிறஆவலுக்கு வடிகாலாக அமைந்திருந்தது டாக்டர் ஸ்யாமா அவர்களின் சுதந்திர தினக் கட்டுரை. அவர்களுக்கும் மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். மிக்க நன்றி. மாதா மாதம் மற்றகட்டுரைகள் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடன் இருந்து இதழுக்கு மெருகேற்றி வருகிறது. வாழ்த்துக்கள் வளர்ச்சிக்கு!*

**சந்திரமௌலி,** *தர்மபுரி.*

---

*2. நமஸ்காரங்கள்!*

*பகவத்கீதை பாராயண பொழிப்பரை சூரியநாராயண சுவாமியின் எழுத்து நன்றாக இருக்கின்றது. நல்வாழ்த்துக்கள்.*

*அன்புடன்*

**இராமநாதசர்மா,** *சேலையூர்.*

---

*3. நமஸ்காரங்கள்!*

*வேதபாரதி மூலமாக ஆன்லைன் வழியாக நடக்கும் வகுப்புகள் மிகப்பிரமாதம். குழந்தைகளுக்கு பெரும் வரப்பிரசாதம்.*

**லட்சுமி,** *பல்லாவரம்*

---

*4. நமஸ்காரங்கள்!*

*வேதபாரதியின் தினசரி கிளாஸில் குழந்தை பங்கெடுத்து வருவதால் நல்ல பழக்கங்கள் குழந்தைக்கு வந்துள்ளது. நன்றி.*

**கிருஷ்ணமூர்த்தி,** *சத்யமங்களம்*

---

*5. அன்புள்ள ஆசிரியருக்கு!*

*புரோஹிதர் கட்டுரையின் மூலம் கிராமங்களில் உள்ள பாரம்பர்ய தர்மங்களின் மஹத்துவம், நம் மேன்மையில் புரோஹிதர் பணி பாராட்டுக்குரியது.*

**கடம்பவனம்,** *திருச்சி*

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**

## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்



இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.